**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.**
**முன்னிலை – திருமதி. P. கனிமொழி , L. L. M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் புதன் கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் சித்திரை மாதம் 02 ம் நாள்

TNMY09-001265-2019

**OS.No.168/2019**

செல்வி .....வாதி

//எதிர்//

1) ராஜாராமன் **(இறந்தார்)**
2) செந்தில்
3) ஜானகி
4) கதிரவன்
5) பானுமதி
6) கலாராணி ..... பிரதிவாதிகள்

(இ.ம.எண்.189/2023ல் கடந்த 14.08.2023 தேதியிட்ட உத்தரவுப்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. )

இவ்வழக்கானது 20.01.2016 அன்று O.S 07/2016 என மாண்புமிகு சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 30.11.2019 அன்று O.S 168/2019 என இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு இருந்து வந்து 06.04.2026 அன்று என்முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சங்கரன், அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. J. பாரி அவர்கள் ஆஜராகியும், 4,5,6 பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் கடந்த 13.03.2023 அன்று தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று இந்நீதிமன்றம்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.15 17:48:05 +0530

கீழ்கண்டவாறு வழங்கும்...

**தீர்ப்புரை :–**

வழக்கு சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களை சார்ந்தவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:**

2. இவ்வழக்கு சொத்து குடியிருப்பு வீடு, மனை மற்றும் அதனை சார்ந்த கொல்லை பகுதியாகும். வழக்கு சொத்தில் உள்ள வீட்டு மனை பட்டா மனையாகும். அதனை சார்ந்த கொல்லை பகுதி பாத்திய மனையாகும். வழக்கு சொத்தில் உள்ள வீட்டு மனை பட்டா ஏற்கனவே வாதியின் தாயார் பார்வதி அம்மாளுக்கு சொந்தமாக இருந்தது. அதனை சார்ந்த கொல்லை பகுதி திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமி அபிஷேகக் கட்டளைக்கு சொந்தமானதாகும். கொல்லை பகுதிக்கான பகுதி பாத்தியம் வாதியின் தாயார் பார்வதி அம்மாளுக்கு பாத்தியமுடையதாக இருந்தது. வழக்கு சொத்தில் உள்ள பட்டா மனை மற்றும் அதில் உள்ள கூறை வீட்டை வாதி பெயருக்கு 08.08.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி வாதியின் தாயார் பார்வதி அம்மாள் எழுதிக்கொடுத்து அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் தரங்கம்பாடி சார் பதிவகத்தில் ஆவண எண்.856/2012 என பதியப்பட்டுள்ளது. வழக்கு சொத்தில் உள்ள கோயில் மனையின் பகுதி பாத்தியதை 19.12.2012 தேதியிட்ட பத்திரப்படி வாதி பெயருக்கு விட்டுக்கொடுத்துவிட்டார். வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பின்னர் வாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு அதற்கான பட்டா மாறுதல் உத்தரவு 05.11.2012 ல் தரங்கம்பாடி வட்டாட்சியார் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனை அனுசரித்து வாதி பெயருக்கு தனி பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு 1ம் பிரதிவாதியின் குமாரர் 2ம் பிரதிவாதி ஆவார். இவ்வழக்கு 3ம் பிரதிவாதி 1ம்



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:48:15 +0530

பிரதிவாதியின் சகோதரர் கணேசன் என்பவரின் மனைவி. பிரதிவாதிகளின் வீடு, மனை தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ளது, தாவா சொத்தையும், பிரதிவாதிகளின் சொத்தையும் பிரிக்க வேலி உள்ளது, அதில் உயிர்கால் மரங்களும் உள்ளன. ஆனால் மேற்படி வேலி பிரதிவாதிகளின் பராமரிப்பில் உள்ளது. கடந்த 09.01.2016 அன்று அந்த வேலியை அகற்றி விட்டு தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிக்கப்போவதாக வீண் தகராறு செய்தார்கள். பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் அத்துமீறி ஆக்கிரமணம் செய்யப்போவதாக தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார்கள். பிரதிவாதிகள் பணபலம், ஆள் பலம் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள். பிரதிவாதிகளின் செயலை நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே தடை செய்ய இயலும். எனவே வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3ம் பிரதிவாதி தாக்கல் செய்து 1,2 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

3. இந்த எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் நேரடியாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் யாவும் மறுக்கப்படுகின்றன. தாவா சொத்து விபரத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் 432–11 ஆனது வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதில் இந்த 3ம் பிரதிவாதிக்கு எவ்வித மறுப்பும் கிடையாது. ஆனால் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடமான வாதியால் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்.432/4G புஞ்சை இடமும் அதில் உள்ள வீடும் எக்காலத்திலும் வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல. மேற்படி சர்வே எண்.432/4G என்பது தவறு. அதன் சர்வே எண்.408–10 ஆகும். அந்த இடம் அ/மி திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொந்தமான சொத்து. அந்த சொத்து வாதியின் தந்தையாரும், 3ம் பிரதிவாதியின் கணவர் கணேசனின் மூத்த சகோதரர் கோவிந்தசாமி என்பவருக்கு குடும்ப பாகப் பிரிவினை மூலம் கிடைத்து அவரது அனுபவத்தில் இருந்து வந்தது. அதில் வாதியின் கணவர் கணேசன், அவரது முதல் மனைவி கோவிந்தம்மாள் என்பவருடன் கூரை வீடு கட்டி குடியிருந்து வந்து கோவிந்தம்மாள் இறந்தவுடன் கோவிந்தசாமி மேற்படி கணேசனுக்கு வாதியை திருமணம் செய்து வைத்துள்ளார்.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:48:23 +0530

அப்போது 3ம் பிரதிவாதி பெயருக்கு தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து கடந்த 23.11.1994ல் ஒரு இனாம் சாசனம் மூலம் அனுபவ பாத்திய உரிமையை கொடுத்து அது முதல் தாவா சொத்தில் 3ம் பிரதிவாதியும் அவரது கணவரும் குடியிருந்து வந்தனர். பின்னர் 3ம் பிரதிவாதியின் கணவர் 2010ல் இறந்துவிட்டார். மேற்படி கோவிந்தசாமியும் இறந்துவிட்டார். அதன்பின்னர் 3ம் பிரதிவாதி தனது குழந்தைகளுடன் தாவா சொத்தில் தொடர்ந்து எவ்வித இடையூறுமின்றி குடியிருந்து வந்தார். இந்நிலையில் மேற்படி கோவிந்தசாமியின் மகளான வாதி மேற்படி சொத்திற்கு மேற்கால் உள்ள புல எண். 432/11ஐ பட்டா மாற்றம் செய்துகொண்டு அதனுடன் 3ம் பிரதிவாதியால் அனுபவிக்கப்பட்டு வரும் தாவா சொத்தையும் ஆக்கிரமித்து கொள்ள முயற்சி செய்துள்ளார். எனவே, தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் எனக் கூறியுள்ளனர்.

4. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

**1) தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும் வசத்திலும் உள்ளதா?**

**2) வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?**

**3) தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

5. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2 ஆக திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தின் எழுத்தர் திருவேங்கடம் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.3 ஆக வாதியின் சகோதரர் ராமலிங்கம் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:48:32 +0530

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>இருதரப்பு வாதம்:-</u>**

**6.** வாதி தரப்பில் தாவா 1வது அயிட்ட சொத்து வாதியின் தாயார் பார்வதி அம்மாளுக்கு பட்டாவின் மூலம் கிடைத்தது என்றும், அவர் அந்த சொத்தினை கடந்த 08.08.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி வாதிக்கு எழுதிக்கொடுத்துவிட்டதாகவும், தாவா 2வது அயிட்ட சொத்து தாவா 1வது அயிட்ட சொத்தினை சார்ந்த கொல்லை பகுதி என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தானது திருக்கடையூர் அ/மி அமிர்தகடேஸ்வரர் சுவாமி அபிஷேக கட்டளைக்கு சொந்தமானது என்றும், அந்த சொத்திற்கான பகுதி பாத்தியம் வாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்டதாக இருந்து அதை வாதிக்கு கடந்த 19.12.2012 தேதியிட்ட ஆவணம் மூலம் விட்டுக்கொடுத்துவிட்டார் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்திற்கான பட்டாவை வாதி பெயரில் மாற்றம் செய்து வாதி அனுபவித்து வருவதாகவும், 1ம் பிரதிவாதியின் குமாரர் 2ம் பிரதிவாதி என்றும், 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் சகோதரர் கணேசன் என்பவரின் மனைவி என்றும், பிரதிவாதிகளின் வீடு, மனை தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ளதாகவும், தாவா சொத்தையும், பிரதிவாதிகளின் சொத்தையும் பிரிக்க வேலி உள்ளதாகவும், அந்த வேலியை அகற்றி விட்டு தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

7. 3ம் பிரதிவாதி தரப்பில் தாவா 1வது அயிட்ட சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை ஒப்புக்கொள்வதாகவும், தாவா 2வது அயிட்ட சொத்தானது எந்த காலத்திலும் வாதிக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தின் புல எண்.432/4G என்பது தவறு என்றும், அதன் புல எண். 408/10 என்றும், அந்த இடம் அ/மி திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொந்தமான சொத்து என்றும், அந்த சொத்து வாதியின் தந்தையாரும், 3ம் பிரதிவாதியின் கணவர் கணேசனின் மூத்த சகோதரர் கோவிந்தசாமி என்பவருக்கு குடும்ப பாகப் பிரிவினை மூலம் கிடைத்து அவரது அனுபவத்தில் இருந்து வந்ததாகவும்,



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:48:39 +0530

அதில் வாதியின் கணவர் கணேசன், அவரது முதல் மனைவி கோவிந்தம்மாள் என்பவருடன் கூரை வீடு கட்டி குடியிருந்து வந்து கோவிந்தம்மாள் இறந்தவுடன் கோவிந்தசாமி மேற்படி கணேசனுக்கு வாதியை திருமணம் செய்து வைத்ததாகவும், அப்போது 3ம் பிரதிவாதி பெயருக்கு தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து கடந்த 23.11.1994ல் ஒரு இனாம் சாசனம் மூலம் அனுபவ பாத்திய உரிமையை விட்டுக்கொடுத்ததாகவும், அந்த நாள் முதல் தாவா 2வது அயிட்ட சொத்தில் 3ம் பிரதிவாதி குடியிருந்து வந்ததாகவும், அந்த இடத்தை வாதி தற்போது அபகரிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

8. **இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

**<u>தீர்வு:-</u>**

**<u>எழுவினா 1 :–</u>**

9. **தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும் வசத்திலும் உள்ளதா? என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,** தாவா 1வது அயிட்ட சொத்தானது வாதிக்கு அவரது தாயார் பார்வதி அம்மாள் கடந்த 08.08.2012 அன்று எழுதிவைத்த செட்டில் மெண்ட் ஆவணம் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா 1வது அயிட்ட சொத்திற்கு வாதியின் தாயார் பெயரில் உள்ள அடங்கல் பதிவேடு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் கிடைக்கபெற்ற தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி தனது பெயரில் பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார். வாதி பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு வா.சா.ஆ.4 ஆகவும், வாதி பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செயயப்பட்டுள்ளது. மேலும், வாதி பெயரில் உள்ள தாவா 1வது அயிட்ட சொத்திற்கான சிட்டா வா.சா.ஆ.6 ஆகவும், அடங்கல் வா.சா.ஆ.7 ஆகவும், தாவா 1வது அயிட்ட சொத்திற்கு வாதி செலுத்திய மின் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ.10 ஆகவும், வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தாவா சொத்து வாதிக்கு செட்டில் மெண்ட் ஆவணம் மூலம்



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.15 17:48:46 +0530

கிடைக்கப்பெற்றுள்ளது என்பதும், அந்த சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதும் தெரியவருகிறது. 3ம் பிரதிவாதி தரப்பில் தாவா 1வது அயிட்ட சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவரது அனுபவத்தில் உள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

10. வாதி தரப்பில் தாவா 2வது அயிட்ட சொத்தானது திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் சுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதற்கு வாதியின் தாயார் பெயரில் பகுதி பாத்தியம் இருந்ததாகவும், அந்த பகுதி பாத்திய உரிமையை வாதியின் தாயார் வாதிக்கு கடந்த 19.12.2012 தேதியிட்ட ஆவணம் மூலம் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது. அந்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை பரிசீலனை செய்கையில், "**திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் சுவாமி அபிஷேக கட்டளைக்கு சொந்தமானதும், என் அனுபவத்தில் இருந்து வருவதுமான கீழ்கண்ட விபரபடிக்குள்ள மனையை உனக்கு இந்த செட்டில்மெண்ட் மூலம் கொடுத்திருக்கிறேன்"** என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் மேற்படி சொத்தானது பகுதி பாத்தியத்தின் அடிப்படையில் பார்வதி அம்மாளுக்கு கிடைத்ததாக கூறவில்லை. பார்வதி அம்மாள் பெயரில் உள்ள பகுதி பாத்திய ஆவணம் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் பார்வதி அம்மாள் மேற்படி கோவிலுக்கு பகுதி செலுத்தியத்தியதற்கான ரசீது எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தரப்பில் மேற்படி அமிர்தகடேஸ்வர் சுவாமி கோவிலுக்கு பகுதி செலுத்தியதற்கான ரசீதுகள் வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதியின் தாயார் பார்வதி அம்மாள் பெயர் குறிப்பிடப்படவில்லை. கிருஷ்ணபூசியின் மகன் சுப்பு பூசி என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சுப்பு பூசி யார் என்பது குறித்து வாதி தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை. எந்த சொத்து சம்பந்தமாக சுப்பு பூசி பெயரில் வாதி மேற்படி கோவிலுக்கு வரி செலுத்தியுள்ளார் என்பதும், வாதி தரப்பில் குறிப்பிடப்படவில்லை. மேலும், தாவா 2வது அயிட்ட சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:49:02 +0530

வாதி தரப்பில் திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் சுவாமி கோவிலின் எழுத்தர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9– ஆனது தங்களது ஆலயத்திலிருந்து கொடுக்கப்பட்ட ரசீதுகள் என சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், **" வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 எந்த புல எண்ணிற்காக கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. புல எண்ணின் அனுபவத்தை பொறுத்து என்னால் கூடிய இயலுமா என்றால் இயலாது. வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆன ரசீதுகள் தாவா சொத்திற்கானது இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது"** என சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2ன் சாட்சியத்தின் அடிப்படையில் தாவா 2வது அயிட்ட சொத்தானது வாதியின் அனுபவத்தில் உள்ளதாக எடுத்துக்கொள்ள இயலாது. எனவே, தாவா 2வது அயிட்ட சொத்தானது வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதை வாதி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>எழுவினா 2:–</u>

11. **தாவா சொத்து குறித்து வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில்,** தாவா 1வது அயிட்ட சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதையும், வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதையும் வாதி தரப்பில் நிரூபித்துவிட்டதாக மேற்படி எழுவினாவில் முடிவு காணப்பட்டிருப்பதால் தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தானது வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதை வாதி நிரூபிக்கவில்லை என்பதால் தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் மேற்படி எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.

<u>எழுவினா 3:–</u>

12. எழுவினா 1ல் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டிருப்பதாலும், எழுவினா 2ல் தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என தீர்வு



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.15 17:49:10 +0530

காணப்பட்டிருப்பதாலும் வேறெந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

13. **முடிவாக, தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களை சார்ந்தவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு அளித்தும் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்படுகிறது.**

14. **இறுதியாக இந்த வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.04.2026 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:49:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**பின் இணைப்பு:-**

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

வா.சா.1 – செல்வி ( வாதி)

வா.சா.2 – திருவேங்கடம்,

(திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தின் எழுத்தர்)

வா.சா.3 – ராமலிங்கம், ( வாதியின் சகோதரர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| வா.சா.ஆ1 | 08.08.2012 ஆம் தேதியிட்ட வாதியின் தாயார் பார்வதி தாவா 1 வது இனச் சொத்தைப்பொறுத்து வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் |
| வா.சா.ஆ2 | 19.12.2012 தேதியிட்ட தாவா 2 வது இனச் சொத்தைப் பொறுத்து வாதியின் தாயார் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் |
| வா.சா.ஆ3 | 31.07.2012 ஆம் தேதியிட்ட தாவா 1 வது இனச்சொத்தை பொறுத்து வாதியின் தாயார் பெயரில் நத்தம் அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | 05.11.2012 தேதியிட்ட தாவா சொத்திற்கு வாதியின் பெயருக்கு ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு |
| வா.சா.ஆ.5 | 07.11.2012 தேதியிட்ட தாவா 1 வது இனச்சொத்திற்கு வாதி பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் |
| வா.சா.ஆ.6 | 14.01.2016 தேதியிட்ட தாவா 1 வது இனச் சொத்திற்கு வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டாவின் உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | 14.01.2016 தேதியிட்ட தாவா 1வது இனச்சொத்திற்கு வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரி திட்ட அடங்கலின் உண்மை நகல் |
| வா.சா.ஆ.8 | 22.06.2012 தேதியிட்ட தாவா 2 வது இனச்சொத்திற்கு வாதி செலுத்திய பகுதி ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.9 | 07.10.2015 தேதியிட்ட தாவா 2 வது இனச் சொத்திற்கு வாதி செலுத்திய பகுதி ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.10 | 19.09.2013 முதல் 08.11.2015 வரை தாவா சொத்திற்கு மின் கட்டணங்கள் செலுத்தியதன் ரசீதுகள் ( 9 எண்ணிக்கைகள்) |
| வா.சா.ஆ.11 | 05.02.2015 தேதியில் தாவா சொத்திற்கு செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-**

பி.வா.சா.1 - ஜானகி (3ம் பிரதிவாதி)

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 19.08.1994 தேதியிட்ட 3ம் பிரதிவாதி ஜானகியின் திருமண அழைப்பிதழின் அசல் |



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.15 17:49:31 +0530

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.2 | 23.11.1994 தேதியிட்ட வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அனுபவ பாத்திய இனாம் சாசனத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.3 | தாவா 2 வது அயிட்ட சொத்திற்கான 1978 – 1979 மற்றும் 1990 -1991க்கான 3ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை - 2) |
| பி.வா.சா.ஆ.4 | 02.07.2010 தேதியிட்ட 3ம் பிரதிவாதியின் கணவர் கணேசன் என்பவரின் இறப்பு சான்றிதழின் அசல் |

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:49:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.